ரயில்வே பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட

# சென்னை – பெங்களூர் 2 அடுக்கு எசி ரயில் இப்போது இல்லை

■ சஞ்ஜெயா இரகுநாதன்

ரயில்வே பட்ஜெட் முன்னோட்டம் –2

**சென்னை பிப்.16:** தமிழகத்திற்கு கூடுதல் ரயில் விட வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகள் நிலுவையில் ஒரு பக்கம் இருந்தாலும், பட்ஜெட்டின் அறிவிப்புகள் அமலுக்கு வர நீண்ட காலம் ஆகிவிடுகிறது. புதிய ரயில் அறிவிப்புகளும் அந்த வகைதான்.

ரயில்வே அமைச்சராக இருந்த தினேஷ் திரிவேதி 2012 மார்ச் மாதம் 14ம் தேதி ரயில்வே பட்ஜெட்டை தாக்கல் செய்த போது 'சென்னை –பெங்களூர் இடையே இரண்டடுக்கு ஏசி ரயில் இயக்கப்படும்' என்று அறிவித்தார். எப்போது இயக்கப்படும் என்ற கேள்விக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட புதுடெல்லி– ஜெய்பூர் 2 அடுக்கு ஏசி ரயில் 24–8–2012ம் தேதியும், மும்பை – அகமதாபாத் 2 அடுக்கு ஏசி ரயில் 19–9–2012ம் தேதி இயக்கப்பட்டதும் கூடுதல் எதிர்பார்ப்பு எழுந்தது. அதற்குள் சிலர் 2012 டிசம்பர் அல்லது ஜனவரி 2013 மாதத்திற்குள் சென்னை– பெங்களூர் 2 அடுக்கு ரயில் இயக்கப்படும் என்று தகவல் வெளியிட்டனர்.

ஆனால் உண்மையில் சென்னை–பெங்களூர் 2 அடுக்கு ரயில் உடனடியாக இயக்க வாய்ப்பில்லை என்று அதிகாரிகளே தெரிவிக்கின்றனர். இது குறித்து இரண்டடுக்கு ஏசி ரயிலுக்கான பெட்டிகள் தயாரிக்கும் கபூர்தலாவில் உள்ள ரயில் பெட்டிகள் தொழிற்சாலை (ஆர் சி எப்) பொறியாளர் ஒருவரிடம் பேசியபோது, 'வழக்கமான ஏசிப் பெட்டிகளை செய்வதை விட 2 அடுக்கு ஏசிப் பெட்டிகள் தயாரிக்க கூடுதல் நேரம் தேவைப்படுகிறது. அடுத்த ரயில் தயாராக மே மாதம் ஆகும்.



காரணம் ஆர்சிஎப்பில் மற்ற வகை பெட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. இரண்டடுக்கு ஏசிப் பெட்டிகளை தயாரிக்க முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற உத்தரவு ஏதுமில்லை. அதனால் மற்ற பெட்டி தயாரிப்புகளுக்கு இடையில் அந்தப்பெட்டிகளின் வேலைகளும் நடைபெறுகின்றன' என்றார்.

எனவே சென்னை – பெங்களூர் ரயில் இந்த ஆண்டு பட்ஜெட்டிற்குள் இயக்க சிறிதும் வாய்ப்பில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் 2 அடுக்கு ரயில் இயக்கப்பட்டால் அதிசயம் என்று தெற்கு ரயில்வ அதிகாரிகளே தெரிவிக்கின்றனர். காரணம் சென்னை – பெங்களூர் 2 அடுக்கு ரயில் அறிவிக்கப்பட்டபோது போபால் (ஹபீப்கஞ்ச்)– இந்தூர் இடையிலான 2 அடுக்கு ஏசி ரயிலும் அறிவிக்கப்பட்டது.

வடமாநிலங்களின் தேவையை நிறைவேற்றிய பிறகே தென்மாநில ரயில்கள் இயக்க வாய்ப்பு உள்ளது. காரணம் 2011 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட மதுரை, திருவனந்தபுரம் துரந்தோ எக்ஸ்பிரஸ் ரயில்கள் இயக்க கிட்டதட்ட 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. வடமாநிலங்களில் அறிவித்த துரந்தோ ரயில்கள் இயக்கப்பட்ட பிறகு தென் மாநிலத்திற்கான மதுரை, திருவனந்தபுரம் ரயில்கள் டிசம்பர் 15ம் தேதி இயக்கப்பட்டன. அதுமட்டுமல்ல வட மேற்கு ரயில்வேகளின் ஓடித் தேய்ந்த ராஜதானி ரயில்களில் பெட்டியைதான் புதுப்பித்து அந்த ரயில்களில் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எனவே முதலில் இயக்கப்போவது போபால்– இந்தூர் இடையேதான் 2 அடுக்கு ஏசி ரயில் இயக்க வாய்ப்புள்ளது. அதன்பிறகு மெல்லமாக சென்னை– பெங்களூர் இடையே . 2 அடுக்கு ரயில் இயக்குவது குறித்து முடிவு செய்யப்படும்.

அதேபோல் 2012ம் ஆண்டு பட்ஜெட்டில் 18 சென்னை புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதாவது சென்னை கடற்கரையில் இருந்து செங்கல்பட்டு, ஆவடி, திருத்தணி, கும்மிடிபூண்டி, சூலூர்பேட்டை, வேளச்சேரி, தாம்பரம் ஆகிய ஊர்களுக்கு இந்த ரயில்கள் இயக்கப்படும் என்ற அறிவிப்பு இன்னும் அமலுக்கு வரவில்லை.

பாலக்காட்டில் இருந்து கோவை வழியாக ஈரோட்டுக்கு இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட முக்கிய தடமின்சார ரயில் இன்னும் இயக்கப்படவில்லை.

அதேபோல் தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கைப்படி, திருநெல்வேலி –தாதர் (மும்பை) இடையே மடகான் (கோவா) வழியாக வாரந்திர எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்படும் என்ற அறிவிப்பு அப்படியே உள்ளது. அதே போல் மதுரை – கச்சேகுடா (ஐதராபாத்) இடையே திண்டுக்கல், திருச்சி, கரூர், ஈரோடு, காட்பாடி, சித்தூர் வழியாக இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட வாரந்திர எக்ஸ்பிரஸ் ரயிலும் இன்னும் இயக்கப்படவில்லை.

மதுரைக்கு இன்னொரு சோதனையும் தீரவில்லை. ரயில்வே பட்ஜெட்டில் டேராடூன்/சண்டிகர் – சென்னை சென்டரல் எக்ஸ்பிரஸ் ரயில் ஈரோடு வழியாக மதுரை வரை இயக்கப்படும் என்றும் அறிவிப்பும் தென், மேற்கு மாவட்ட மக்களுக்கு இனிக்கும் வகையில் மாறவில்லை.

அதுமட்டுமல்ல விழுப்புரம்–காட்பாடி இடையே தினமும் மூன்று ஜோடி பாசஞ்சர் ரயில் இயக்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பும் நடைமுறைக்கு வரவில்லை.

இது குறித்து ரயில்வே அதிகாரிகளிடம் கேட்டால் 'ரயில் பெட்டிகள் பற்றாக்குறையால்தான் பட்ஜெட் ரயில்கள் உடனடியாக இயக்கப்படவில்லை' என்கிறார்கள்.

ஆனால்' யாரும் தட்டிக் கேட்காததுதான் தாமதமாக காரணம்' என்பது பலரின் கருத்து. ஏனென்றால் வடமாநிலங்களில் அறிவித்த ரயில்கள் எல்லாம் உடனுக்குடன் இயக்கப்படுவதுதான் இப்படி தமிழக மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளன.

## அமலுக்கு வரும் முன்னே நேரம் மாற்றத்தால் அவதி

சென்னை –பெங்களூர் 2 அடுக்கு ஏசி ரயில் அமலுக்கு வருவதற்கு முன்பே ஏற்கனவே இயங்கும் சென்னை – பெங்களூர் பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கான நேரம் மாற்றப்பட்டுள்ளது. சென்ட்ரலில் இருந்து காலை 7.15 மணிக்கு புறப்பட்ட பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் இப்போது காலை 7.50 மணிக்கு புறப்படுகிறது. அதனால் சென்னையில் இருந்து வேலூர் மாவட்டங்களில் வேலைக்கு தினமும் சென்று வரும் பயணிகள் இந்த ரயிலை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி காலையில் சென்ட்ரலில் கிளம்பி மதிய சாப்பாட்டுக்கு முன்பு பெங்களூருக்கும், அங்கிருந்து புறப்பட்டு இரவு சாப்பாட்டுக்குள் சென்னைக்கு வந்து சேரும். இப்போது அதிலும் பிரச்னை. எனவே பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் ரயிலை பழைய நேரத்திற்கே மாற்ற வேண்டும் என்பதே பெரும்பான்மையான பயணிகளின் கோரிக்கை.